**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 33/ந/2024
நாள்: 25.03.2025

திரு.S.கௌதமன்,
பொள்ளாச்சி. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதி நகர் D காலனி, P.R.கந்தசாமி தெரு, கதவு எண்.C.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.கௌதமன் என்பவரின் 30.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2024 அன்று பெறப்பட்டு 33/ந/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதி நகர் D காலனி, P.R.கந்தசாமி தெரு, கதவு எண்.C.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.கௌதமன் என்பவர் தனது 30.01.2024 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35–ல் ஜோதிநகர் ‘D’ காலனி மினர்வா வித்தியா மந்திர் பள்ளிக்கு எதிர்புறம் உள்ள நூலக பயன்பாட்டிற்கான பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தமிழக அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கண்ட பகுதியைச் சார்ந்த பல்வேறு அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பாக நிதி திரட்டி சுமார் 10 லட்சம் நகராட்சிக்கு செலுத்தி அரசின் பங்கோடு சுமார் 30 லட்சம் மதிப்பீட்டில் நூலக கட்டிடம் கட்டப்பட்டு தமிழக முதல்வரால் காணொலி காட்சி வாயிலாக திறக்கப்பட்டது.

இந்த நூலக கட்டிடத்தை நூலகத்துறைக்கு 27.06.2023–ல் ஒப்படைப்பு செய்து பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளரால் கடிதம் வழங்கப்பட்டது. நூலக சாவி வழங்கப்படாததால் கட்டிடம் திறக்கப்படவில்லை.

இதற்கிடையில் மேற்கண்ட பொதுமக்களிடம் வசூல் செய்து செலுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்ற அமைப்பு பராமரிப்புக்கு தங்களுக்கு வழங்க கோரிக்கை விடுத்தார்கள். இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நூலக சாவியை நூலக துறைக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டது. நகராட்சி ஆணையர் திரு.சுப்பையா அவர்கள் நூலகத்துறைக்கு சாவியை வழங்கிவிட்டு திறப்பு விழா நிகழ்ச்சி வைத்து தருகிறேன் என்று திரும்ப பெற்றுக்கொண்டார். நூலகத்துறைக்கு சாவியை திரும்ப வழங்கவில்லை.

இந்நிலையில் 12.10.2023–ல் இது குறித்து மாண்புமிகு முதல்வர், அமைச்சர் பெருமக்கள், நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சார் ஆட்சியர், பொள்ளாச்சி ஆகியோருக்கு புகார் மனு அனுப்பினேன். புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை. மீண்டும் 27.12.2023–ல் நடைபெற்ற மக்களின் முதல்வர் முகாமில் முதல்வரின் முகவரிக்கு மீண்டும் புகார் மனு அனுப்பியுள்ளேன். இந்நிலையில் நகராட்சி தலைவர் 29.12.2023–ல் ஒரு கடிதம் வழங்கி அந்த கடிதத்தின் பேரில் மாவட்ட ஆட்சித்தலைவரோடு கலந்து ஆலோசனை செய்து சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு வழங்கலாம் என 31.01.2024–ல் நடைபெற உள்ள நகராட்சி கூட்டத்தில் தீர்மானத்தை ஆணையர் கொண்டு வந்துள்ளார்.

மேற்கண்ட நான் அனுப்பிய புகார் மனுக்களை கவனத்தில் கொள்ளாமல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களோடு கலந்து ஆலோசனை செய்ததாகவும், பங்களிப்புத்தொகையை வசூலித்து செலுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு வழங்கலாம் என தவறான தகவல்களை மன்றத்தில் பதிவு செய்து தீர்மானம் வைத்துள்ளார். மேற்கண்ட தீர்மானத்தை வைத்த நகராட்சி ஆணையர் திரு.சுப்பையா, நகராட்சி பொறியாளர் திருமதி.உமா தேவி, நகராட்சி உதவி பொறியாளர், திரு.கணேஷ் சங்கர், மின் கண்காணிப்பாளர், திரு.கணேசன் இவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர் ஆகியோர் தங்கள் கடமையில் இருந்து தவறிவிட்டார்கள் என நான் கருதுகிறேன்.

நகராட்சிக்கு சொந்தமான சொத்தை பராமரிப்பு என்ற பெயரில் தனியாருக்கு வழங்க மன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. இந்த தவறான தகவலை பதிவு செய்திட்ட மேற்கண்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும், மேற்கண்ட தீர்மானத்தை ரத்து செய்யவும் தாங்கள் ஆவண செய்ய அன்புடன் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.07.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது 06.12.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் கடிதம் வாயிலாக ஜோதிநகரில் நூலக கட்டிடம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்ட பங்களிப்பு வழங்குவதாக சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினர் தெரிவித்ததன் பேரில், நூலக கட்டிடம் கட்ட ரூ.18.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து, நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடும், நிர்வாக அனுமதியும் வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் வாயிலாக தெரிவித்ததன் பேரில் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, நூலக கட்டிடம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

பணிகள் முடிவடையும் தருவாயில், கட்டப்பட்டு வரும் நூலக கட்டிடத்துடன் கூடுதலாக கட்டிடம் தேவைப்படுவதால், அதனை நமக்கு நாமே திட்டத்தில் மேற்கொள்ள தங்களது பங்களிப்பை வழங்குவதாக சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினர் கடிதம் வாயிலாக தெரிவித்ததன் பேரில் ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்து சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் நிதி ஒதுக்கீடும், நிர்வாக அனுமதியும் வழங்கியதின் பேரில் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, நூலக கட்டிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நூலக கட்டிட பணிகள் முடிக்கப்பட்டது.

இந்நிலையில் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் கடிதம் மூலமாக நூலக கட்டிடத்தை பராமரிக்கும் பணியினை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோரியதன் பேரில் நகர்மன்றத்தின் தீர்மானத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனை பேரின் அடிப்படையில் கட்டிடத்தை இயக்கம் மற்றும் பராமரிக்க சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களின் புகார் மனுவில், நூலக கட்டிடத்தை இயக்கம் மற்றும் பராமரிக்கும் பொறுப்பை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினர் வசம் ஒப்படைத்தது தவறு என தெரிவித்தார். மேலும் பராமரிப்பு பணிக்காக அனுமதி வழங்கிய நிலையில், நிபந்தனைகள் வரிசை எண்.12–ல் தெரிவிக்கப்பட்டதற்கு ஏற்ப கட்டிடத்தை நூலக பயன்பாட்டிற்காக முறையாக பராமரிக்கப்படாமலும் செயல்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினருக்கு வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்து நகராட்சி கடிதம் வாயிலாக சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

நகராட்சி கடிதம் வாயிலாக பராமரிப்பு பணி செய்ய வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்தமைக்கு நகர்மன்ற தீர்மானம் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி கடிதம் வாயிலாக மாவட்ட நூலக துறைக்கு, நூலக கட்டிடத்தை அவர்கள் பொறுப்பில் எடுத்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

4. மனுதாரரையும் மற்றும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரையும் 23.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.கௌதமன் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35–ல் கட்டப்பட்ட நூலகத்தை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனியாருக்கு தாரை வார்த்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நூலகம் தற்போது நூலகத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டதும், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசு துறை கட்டிடம் அரசு துறைக்கே வழங்கப்பட வேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் 23.01.2025 அன்று விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

“நமக்கு நாமே திட்டம் 2021–22ன் கீழ் பொள்ளாச்சி நகராட்சி வார்டு 35–ல் கட்டப்பட்ட நூலகக்கட்டடம் நகர்மன்ற தீர்மான எண்.844 நாள் 31.01.2024–ன்படி நூலகக்கட்டிடத்தை பராமரிக்கும் பொருட்டு, சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு அனுமதியும், மற்றும் நூலக திறவுகோலும் முன்னாள் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டது. நகர்மன்ற துணைத்தலைவர் திரு.கௌதமன் அவர்களின் புகார் மனு அடிப்படையில் மேற்படி சங்கத்திற்கு அளித்த அனுமதி நகர்மன்ற தீர்மான எண்.1266 நாள் 25.10.2024ன்படி இரத்து செய்யப்பட்டு 05.12.2024 முதல் மாவட்ட நூலகத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35–ல் ஜோதிநகர் ‘D’ காலனி மினர்வா வித்தியா மந்திர் பள்ளிக்கு எதிர்புறம் உள்ள நூலகம் பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தமிழக அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பல்வேறு அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பாக நிதி திரட்டியும், நகராட்சியின் பங்கோடு நூலக கட்டிடம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வரால் காணொலி காட்சி வாயிலாக திறக்கப்பட்டுள்ளது என்றும், இதனை நகராட்சி ஆணையாளர் பொள்ளாச்சி அவர்களால் நூலகத்துறைக்கு 27.06.2023ல் ஒப்படைப்பு செய்த நிலையில், நூலக சாவி வழங்கப்படாததால் கட்டிடம் திறக்கப்படவில்லை என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நூலகத்தை சமரச சுத்த சன்மார்க்க சங்கம் எனும் தனியாரிடம்

ஒப்படைக்க தீர்மானம் வைத்த நகராட்சி ஆணையர் திரு.சுப்பையா, நகராட்சி பொறியாளர் திருமதி.உமா தேவி, நகராட்சி உதவி பொறியாளர், திரு.கணேஷ் சங்கர், மின் கண்காணிப்பாளர், திரு.கணேசன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தனியாரிடம் ஒப்படைக்கும் வகையில் வைத்துள்ள நகரமன்ற தீர்மானத்தை ரத்து செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு அனுமதியும், மற்றும் நூலக திறவுகோலும் முன்னாள் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டதை நகர்மன்ற தீர்மான எண்.1266 நாள் 25.10.2024ன்படி இரத்து செய்யப்பட்டு 05.12.2024 முதல் மாவட்ட நூலகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் செயல்பட்டு வருகிறது என்பதை நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

எனவே நூலகக்கட்டிடம் மாவட்ட நூலகத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதும், மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதும் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருவதால் இம்மனு மீதான நடவடிக்கையினை இத்துடன்முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் நமக்கு நாமே திட்ட விதிமுறைகளை சரிவர பின்பற்றுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

2025–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.கௌதமன்,
   C–21, P.R. கந்தசாமி தெரு,
   ஜோதி நகர் ‘D’ காலனி,
   பொள்ளாச்சி – 642 001.

2. நகராட்சி ஆணையர்,
   பொள்ளாச்சி நகராட்சி,
   பொள்ளாச்சி – 642001.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்
(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்